DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 271/2018 |
| Deposition of witness | : | P.W – 8 |
| Name | : | அருண்குமார் |
| Father's /Husband Name | : | ராமமூர்த்தி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 37 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day of January 2025.
Accused absent petition u/s 355 BNSS filed and allowed.

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2018–ம் தேதி மதியம் 03.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது பேரளம் காவல் நிலைய குற்ற எண்.249/2018 வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்துபோன சுமார் 42 வயதுடைய குமார் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி பேரளம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை காவலர் கல்யாணசுந்தரம் என்னிடம் ஆஜர்படுத்தி பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினார். பிரேத படிமம் ஒன்றாமல் காணப்பட்டது. உடல் முழுவதும் பற்பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அவரது இடது பின் மண்டையில் 10 x 6 செமீ அளவிலான ரத்த கட்டு காணப்பட்டது. அவரது வலது கால் உடைந்து காணப்பட்டது. அவரது உடலை கூராய்வு செய்ததில் மூளையில் இடது பக்கத்தில் 150 கிராம் ரத்த கட்டு காணப்பட்டது. வலது காலில் இரு எலும்புகளும் முறிவு ஏற்பட்டிருந்தது. அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்துள்ளார் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

மேற்படி குமார் என்பவருக்கு நான் எதுவும் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர் நிலை தடுமாறி கீழே விழுந்தாலும் மேற்படி ரத்த கட்டு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்படி நபரின் உடலில் வாகனம் ஏறியதற்கான தடயங்களோ காயங்களோ இல்லை என்றால் சரிதான்.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.